Literacy for a Billion

Movie: Vaagai Sooda Vaa
Year: 2011

Song: Porala Porala
Lyricist: Karthik Netha

போறானே போறானே
காத்தோட தூத்தல் போல
போறானே போறானே
போகாமத்தான் போறானே
போறானே போறானே
காத்தோட தூத்தல் போல
போறானே போறானே
போகாமத்தான் போறானே
அழகா நீ நெருங்க
அழகா பொந்துக்குள்
புகையை போல
போறாளே போறாளே
காத்தோட தூத்தல் போல
போறாளே போறாளே
போகாமத்தான் போறாளே
போறாளே போறானே
காத்தோட தூத்தல் போல
போறாளே போறாளே
போகாமத்தான் போறாளே

பருவம் தொடங்கி
ஆசை வச்சேன்
இல்லாத சாமிக்கும்
பூசை வச்சேன்
மழையில் நனைஞ்ச
காத்தை போல
மனசை நீயும்
நனைச்சுப்புட்டே
உயிருக்குள்ளே கொஞ்சம்
இரவல் தாய்யா
உன்னை மனசு கொஞ்சம்
புரிய வாய்யா
ஏற இறங்க பார்க்கும்
ரோசக்காரா
டீத்தூளு வாசம் கொண்ட
மோசக்காரா
அட நல்லாங்குருவி ஒண்ணு
மனசை மறைக்குது
கண்டாங்குயிலை
அது பதுக்கிடுச்சு
சின்ன சின்ன குறத்தி பொண்ணு
கண்ணு முழியைத்தான்
ஈச்சங்காயா ஏன் சிரிச்ச
போறானே போறானே
காத்தோட தூத்தல் போல
போறானே போறானே
போகாமத்தான் போறானே
போறானே போறானே
காத்தோட தூத்தல் போல
போறானே போறானே
போகாமத்தான் போறானே

கிணத்தில் நிலவா
நானிருந்தேன்
கல்லை எறிஞ்சு
குழப்பிப்புட்ட
உன்னை பார்த்து பேசையில
ரெண்டாம் முறையா குத்த வச்ச
பூக்காரன் சவுடப்போல
உன் நினைப்பு
சீம்பாலு வாசம் போல
உன் சிரிப்பு
அடைகாக்கும் கோழி போல
என் தவிப்பு
பொசுக்குன்னு பூத்திருச்சே
என் பொழைப்பு
அடி மஞ்சக்கிழங்கே உன்னை
நினைச்சு நினைச்சு தினம்
மனசுக்குள்ள வச்சு
பூட்டிக்கிட்டேன்

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*

PlanetRead

Literacy for a Billion

உன் பிஞ்சு விரல் பதிச்ச
மண்ண எடுத்து நான்
காயத்துக்கு பூசிக்கிட்டேன்
போறாளே போறாளே
போறாளே
போகாமத்தான் போறாளே
அழகா நீ நெருங்க
அழகா பொந்துக்குள்
புகையை போல

போறானே போறானே
காத்தோட தூத்தல் போல
போறானே போறானே
போகாமத்தான் போறானே
போறானே போறானே
காத்தோட தூத்தல் போல
போறானே போறானே
போகாமத்தான் போறானே
போறானே போறானே

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*